Annexure - II

255

நக.எண் 6161/2017/அ6, நாள்: 01.12.2017.

# நாமக்கல் கோட்ட வன பாதுகாப்பு சட்டம் 1980 குழு நடவடிக்கைகள்

******

நாமக்கல் மாவட்டம், இராசிபுரம் வட்டம், வெண்ணந்தூர் வட்டாரம், புதுப்பட்டி முதல் கெடமலை வரை, நாமக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் கடிதத்தின் படி வனத்துறைக்கு பாத்தியப்பட்ட வன நிலங்களில் 2.71.0 ஹெக்டேர் மற்றும் வடுகம் முதல் மேலூர் வரை இராசிபுரம் வனச் சரகம் வனத்துறைக்கு உட்பட்ட வன நிலங்களில் குக்கிராமங்களுக்கு இணைப்புச்சாலைகள் வனத்துறை நிலத்தில் பிரதம மந்திரி சடக யோஜன திட்டத்தின் கீழ் சாலை அமைக்க, வனப்பாதுகாப்பு சட்டம் 1980 ன் படி நடவடிக்கை எடுக்கும் பொருட்டு அறிவுறுத்தியதின் பேரில் மேற்படி வன நிலத்திற்குட்பட்ட வருவாய் கிராமங்கள், குக்கிராமங்களின் எண்ணிக்கை மற்றும் சாலை அமைக்க கோரும் வன நிலத்தில் உள்ள மரங்களின் எண்ணிக்கை (Per Hec.) போன்ற விபரங்களை இராசிபுரம் வட்டாட்சியர் அறிக்கை அளித்துள்ளார். மேலும் இராசிபுரம் வனச்சரக அலுவலரின் அறிக்கையும் வரப்பெற்றது.

நாமக்கல் கோட்டத்தில் வன பாதுகாப்பு சட்டம் 1980 ன் படி மேற்படி கிராமங்களுக்கு சாலை அமைக்கும் திட்டத்தில் கோட்ட அளவிளான குழு பரிந்துரை அனுப்பும் பொருட்டு, நாமக்கல் சார் ஆட்சியர் அவர்களின் தலைமையில் 01.12.2017 அன்று முற்பகல் 11.00 மணியளவில் நாமக்கல் சார் ஆட்சியர் அலுவலகத்தில் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் நாமக்கல் மாவட்ட ஆதி திராவிடர் நல அலுவலர், திட்ட அலுவலர் (பழங்குடியினர் நலம்), கொல்லிமலை வட்டாட்சியர் மற்றும் கொல்லிமலை வன சரகர் மற்றும் திரு.சந்திரசேகரன்,MLA., திரு.பி.சந்திரன், திரு.பி.கே.செல்வராஜ் ஆகியோர்கள் கலந்து கொண்டனர்.

நாமக்கல் மாவட்டம், இராசிபுரம் வட்டம், புதுப்பட்டியிலிருந்து கெடமலைக்கு சாலை அமைக்கும் திட்டத்தில் இராசிபுரம் வட்டம், ஆர்.புதுப்பட்டி கிராமம், சர்வே எண்: 456 மலைப் புறம்போக்கு நிலத்தில் ஆரம்பித்து கெடமலை கிராமம் வரை சாலை வசதி ஏற்படுத்தப்பட உள்ளது. இந்த சாலையானது சர்வே எண்: 89 மொத்த விஸ்தீரணம் 2891.97.0 ஹெக்டேர் புதுப்பட்டி காப்புக் காடு (Pudupatty RF) நிலத்தில் 4.5 மீட்டர் முதல் 8.0 மீட்டர் அகலம் வரையிலும் 4.70 கி.மீ நீளத்திற்கு சாலை அமைக்க அளவீடு செய்யபட்டுள்ளது என்றும், இதன் மொத்தப்பரப்பு 2.71.0 ஹெக்டேர் நிலமாகும்.

இதே போல் மேலும் வடுகம் முதல் மேலூர் வரை சால அமைக்கும் திட்டத்தில் இராசிபுரம் வட்டம், புதூர் மலையாளப்பட்டி கிராமம், சர்வே எண்: 101 மலைப் புறம்போக்கு நிலத்தில் ஆரம்பித்து கீழுர் கிராமம் வழியாக மேலூர் கிராமம் வரையிலும் மற்றொரு சாலை வசதி ஏற்படுத்தப்பட உள்ளது. இந்த சாலையானது சர்வே எண்: 188 மொத்த விஸ்தீரணம் 2375.70.0 ஹெக்டேர் மல்லூர் காப்புக் காடு (Mallur RF) நிலத்தில் 4.5 மீட்டர் முதல் 6.0 மீட்டர் அகலத்தில்

...0 கி.மீ. நீளத்திற்கு அளவீடு செய்யப்பட்டுள்ளது. இதன் மொத்தப்பரப்பு 5.96.0 ஹெக்டேர் ஆகும். இந்தப்புலங்கள் முழுவதும் வனத்துறைக்கு ஒப்படை செய்யப்பட்டுள்ளது என்றும், மேற்படி நிலம் ஒப்படை நிலமென்பதால் வருவாய்த்துறை ஆவணங்களில் குறிப்பிடப்படவில்லை என்றும், வனத்துறையின் ஆவணங்களின் அடிப்படையில் முதற்கட்டமாக உத்தேச அறிக்கை தயார் செய்யப்பட்டுள்ளது. என்றும், இந்த ஒதுக்கக் காடுகளில் வன உரிமைச் சட்டத்தின் கீழ் உரிமை கோரி வருவாய்த்துறையிடம் வன உரிமை கூட்டம் 2006, நாள்: 13.12.2005 ன் படி இந்த மலைப் பகுதியில் வன உரிமை கோரப்படவில்லை.

மேலும் கிராம (பஞ்சாயத்து) சபை தீர்மானம் நாள்: 15.07.2017 ம் தேதியில் நடைபெற்ற கீழூர் கிராம ஊராட்சியின் பொருள் 4 ல் புதுப்பட்டி முதல் கெடமலை வரை மற்றும் வடுகம் முதல் மேலூர் வரை தார்சாலை அமைக்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. மேலும் வன உரிமைக்குழு கூட்டம் மேலூர், கீழூர் குக்கிராமங்களுக்கு சாலை அமைக்க 14.07.2017 ம் தேதியில் பொருள் 1 ல் அங்கிகரிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட இரண்டு சாலைகளை அமைப்பதற்கு கோட்ட அளவிலான குழுவின் பரிந்துரைக்காக 01.12.2017 இன்று நடைபெற்ற கூட்டத்தில் உறுப்பினர்கள் அனைவராலும் ஒப்புக்கொள்ளப்பட்டு மேற்படி சாலை அமைத்திட மேற்கண்ட நிலங்களில் வன உரிமை கோரப்படவில்லை என்றும், ஆட்சேபனை எதுவுமில்லை என்றும் முடிசெய்யப்பட்டு கூட்டம் நிறைவு செய்யப்பட்டது.

பழங்குடியினர் இனத்தைச் சேர்ந்த
வன உரிமை குழு உறுப்பினர்கள்

1) 2)

3)

~~தனித்தாசில்தார் (ஆ.தி.ந)~~/
திட்ட அலுவலர்,(ப.ந),
கொல்லிமலை.

வனச்சரகர்,
கொல்லிமலை.

கோட்ட வன உரிமை குழு தலைவர்
மற்றும் சார் ஆட்சியர், நாமக்கல்.